2024 – 25 ஆம் ஆண்டிற்கான இளநிலை மருத்துவம் – பல் மருத்துவம் மற்றும்

மருத்துவம் சார்ந்த பட்டப்படிப்புகளுக்கான தரவரிசைப் பட்டியல்!

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வெளியிட்டார்!

சென்னை, ஆக. 21 - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (19.08.2024) சென்னை, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநரகம் சார்பாக, 2024-25 ஆண்டிற்கான இளநிலை மருத்துவம் (MBBS), பல் மருத்துவம் (BDS) மற்றும் மருத்துவம் சார்ந்த (Paramedical) பட்டப் படிப்புகளுக்கான மாணவர்களின் தரவரிசை பட்டியலை வெளியிட்டார்.

பின்னர் அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

அரசு ஒதுக்கீடு இடங்கள்

மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககம் மற்றும் தேர்வு குழு சார்பில் 2024-2025 ஆம் ஆண்டின் மருத்துவம் மற்றும் பல் மருத்துவம், அரசு மருத்துவ இடங்கள், சுயநிதி மருத்துவக்கல்லூரியில் உள்ள அரசு மருத்துவ இடங்கள், சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள நிர்வாக மருத்துவ இடங்களில் சேர்வதற்குறிய விண்ணப்பங்கள் இணைய தளத்தின் மூலம் 31.07.2024 முதல் வரவேற்கப்பட்டு 09.08.2024 வரை விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க இறுதி நாளாக அறிவிக்கப்பட்டது.

அந்த வகையில் இது வரை வந்துள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 43,063 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இது கடந்த ஆண்டை காட்டிலும் 2721 விண்ணப்பங்கள் அதிகமாகும். இதில் 7.5% அரசு பள்ளி மாணவர்களின் உள் ஒதுக்கீட்டுக்கு 3,733 விண்ணப்பங்கள் பெறப்பட்டு இருக்கிறது. விளையாட்டுப் பிரிவுக்கு 343 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கிறது. முன்னாள் படைவீரர் பிரிவு ஒதுக்கீட்டிற்கு 455 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கிறது. மாற்றுத்திறனாளிகள் ஒதுக்கீட்டு பிரிவுக்கு 133 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கிறது.

பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களையும் பரிசீலித்து மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் படிப்புகளுக்கான தரவரிசைப் பட்டியலும் மற்றும் 7.5% அரசு பள்ளி மாணவர் களின் உள் ஒதுக்கீட் டிற்கான பட்டியலும் தற்போது வெளியிடப் படவிருக்கிறது. தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரை அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுய நிதி மருத்துவக் கல்லூரிகளின் மொத்த எம்.பி.பி.எஸ் இடங்கள் 6,630, அரசு பல் மருத்துவக்கல்லூரிகளில் மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுய நிதி பல் மருத்துவக் கல்லூரிகளில் மொத்த BDS பல் மருத்துவ இடங்கள் 1683. மேலும் 7.5% ஒதுக்கீட்டிற்கான அரசு மருத்துவக்கல்லூரிகள் மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுயநிதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மொத்த எம்.பி.பி.எஸ் இடங்கள் 496.

7.5% ஒதுக்கீடு இடங்கள் !

7.5% ஒதுக்கீட்டிற்கான அரசு மருத்துவக்கல்லூரிகள் மற்றும் அரசு ஒதுக்கீட்டில் உள்ள சுய நிதி மருத்துவக் கல்லூரிகளில் உள்ள மொத்த BDS இடங்கள் 126. 2024-2025 ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் சேர்க்கைக்காக அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களை பொறுத்த வரை இன்றைக்கு 29,429 விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கிறது. அதில் ஏற்றுக்கொள்ள தகுதி படைத்த விண்ணப்பங்கள் என்கின்ற வகையில் 28,819. ஆண் மாணவர்களை பொறுத்த வரை 10,704, மாணவிகளை பொறுத்தவரை 18,114. 2024-2025 ஆம் ஆண்டிற்கான 7.5% அரசு பள்ளி மாணவர்களின் உள் ஒதுக்கீட்டிற்கான மருத்துவம் மற்றும் பல் மருத்துவம் சேர்க்கைக்கான அரசு ஒதுக்கீட்டு இடங்களுக்கு மாணவர்களிடம் பெறப்பட்ட விண்ணப்பங்களை பொறுத்த வரை மாணவர்களிடம் 3,733. அதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த விண்ணப்பங்களில் தகுதியுடையவர்கள் 3,683 மாணவர்களை பொறுத்த வரை 1041, மாணவிகளைப் பொறுத்தவரை 2642.

நிர்வாக ஒதுக்கீடு இடங்கள்!

2024-25ஆம் ஆண்டிற்கான சுயநிதி மருத்துவம் மற்றும் பல் மருத்துவக் கல்லூரி களுக்கான Management Quota என்று சொல்லக்கூடிய நிர்வாக ஒதுக்கீட்டிற்கான இடங்களுக்கு மாணவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களின் எண்ணிக்கை 13,618, அதில் தகுதியுள்ள விண்ணப்பங்கள் 13,417. மாணவர்களைப் பொறுத்தவரை 4,662 மாணவிகளைப் பொறுத்த வரை 8,755. மேலும் பட்டப்படிப்பில் B.Sc நர்சிங், பி.பார்ம், BPT என்று 19 வகையான 4 வருட பட்டப் படிப்புகளும், Pharm.D 6 வருடம் மற்றும் 3 வருட பட்டப்படிப்புகளும் 23.05.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு 23.05.2024 முதல் 26.06.2024 வரை ஆன்லைனில் விண்ணப்பங்கள் வரவேற்கப் பட்டன. பெறப்பட்ட விண்ணப்பங்களை சரிபார்க்கும் பணி முடிவடைந்து இன்று அதற்கான தரவரிசை பட்டியல் வெளியிடப்படுகிறது.

மருத்துவம் சார்ந்த பட்டப் படிப்பு!

Paramedical Degree Courses பட்டப்படிப்புகளுக்கு பெறப்பட்ட விண்ணப்பங்கள் எண்ணிக்கை 68,108. ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் 67,038. PharmD 6 வருடப் பட்டப்படிப்புகளுக்கு பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 3516, அதில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 3463, Pharm - D 3 வருடப் பட்டப்படிப்புகளுக்கான பெறப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 24, ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 23 ஆகும். அதேபோல் Paramedical degree courseயைப் பொறுத்தவரை அரசு ஒதுக்கீட்டிற்கான இடங்கள் 2870 விண்ணப் பங்கள் பெறப்பட்டுள்ளது, சுயநிதி கல்லூரிகளைப் பொறுத்த வரை 17,446 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது. PharmD 6 வருட சுயநிதிக் கல்லூரிகளைப் பொறுத்தவரை 581, Pharm D 3 வருடப் பட்டப்படிப்புகளுக்கு 61 என்கின்ற வகையில் விண்ணப்பங்கள் பெறப்பட்டிருக்கிறது. விண்ணப்பங்களைப் பொறுத்தவரை முழுமையாக பரிசீலித்து, தகுதியான பட்டியல் இன்று வெளியிடப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு கடந்த ஆண்டினைக் காட்டிலும் MBBSல் கூடுதலாக 150 மாணவர்கள் சேர்க்கும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதில் அன்னை மருத்துவக்கல்லூரியில் 50 மாணவர்களும், கன்னியாகுமரியில் இருக்கின்ற மெடிக்கல் மிஷன் மருத்துவ ஆராய்ச்சி கல்லூரியில் இருந்து 100 என ஆக மொத்தம் 150 இடங்கள் கூடுதலாக கிடைத்துள்ளது. தமிழ்நாட்டில் உள்ள ஒட்டு மொத்தமாக உள்ள எம்.பி.பி.எஸ் இடங்கள் 9,200. BDS பல் மருத்துவத்திற்கான இடங்கள் 2,150.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

திண்டுக்கல் கிழக்கு ,மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டத்தில் மேற்கு மாவட்ட கழக செயலாளர் அரசக்கரபாணி உரையாற்றினார். உடன் கழக துணை பொதுச் செயலாளர் அமைச்சர் இ. பெரியசாமி, கிழக்கு மாவட்ட செயலாளர் இ.பெ. செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.

இது வாழ்த்தல்ல; வற்றாத உணர்வுகளின் வெளிப்பாடு!

வியப்பில் ஆழ்த்திய இளைஞர் அணியின் உரை வீச்சு!

மாநில இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினையொட்டி, கழகத் தலைவர் - தமிழக முதல்வரின் விருப்பமான, நூறு இளம் பேச்சாளர்களை தேர்வுசெய்யும் முதல்கட்ட ஏற்பாடாக 18 மாவட்டங்களில் தொடர்புடைய மாவட்டம் சார்ந்த அமைச்சர்கள், மாவட்டக் கழகச் செயலாளர், ஒருங்கிணைப்பில், இளைஞர் அணி நிர்வாகிகள் ஏற்பாட்டில், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் மேற்பார்வையில் தேர்வுக்கான பேச்சுப் போட்டிகள் நடைபெறும் என்று அறிவித்திருந்தார்கள்.

இதில் 17.8.2024 ஆம் தேதி புதுக்கோட்டையிலும், 18.8.2024 ஆம் தேதி தஞ்சையிலும், என்னுடன் சகோதரி கவிஞர் சல்மா, மதுரை பாலா ஆகியவர்களும் சட்டமன்ற "கொறடா" சகோதரர் கோவிசெழியன் எம்.எல்.ஏ. தலைமையில், மருத்துவர் சுஃபி சுலைமான், கணேஷ்பாபு ஆகியோர் நடுவர்களாக செயல்பட வாய்ப்பளிக்கப்பட்டது.

அதுபோல் 18.8.2024 ஆம் தேதி என்னுடைய தலைமையில், தஞ்சையில், மருத்துவர் சுஃபி சுலைமான், கணேஷ்பாபு ஆகியோர் நடுவர்களாகச் செயல்பட்டோம். தஞ்சையில் மற்றொரு குழுவிற்கு வி.சி. சந்திரகுமார் தலைமையில் மதுரை பாலா, தமிழ்காமராசன் ஆகியோர் நடுவர்களாகச் செயல்பட வாய்ப்பளிக்கப்பட்டது.

மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் தம்பி நா. இளையராஜா புதுக்கோட்டை, தஞ்சை மாவட்ட இளைஞர் அணி நிர்வாகிகளை இணைத்துக் கொண்டு, மாவட்டக் கழகச் செயலாளர், நிர்வாகிகள் மற்றும் தொடர்புடைய அமைச்சர்கள் ஆலோசனைகளோடும், ஒத்துழைப்போடும், இரவு பகலாகப் பணியாற்றி இந்த இரண்டு மாவட்ட நிகழ்ச்சிகளையும் குறிப்பிட்ட காலத்தில் தொடங்கி எத்தகைய தடங்கலுமின்றி அனைவரும் பாராட்டும் வகையில் இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் நா. இளையராஜா தலைமையில், இரண்டு மாவட்டக் கழக இளைஞர் அணி நிர்வாகிகள் மிகச் சிறப்பாக நிகழ்ச்சிகளை வெற்றி பெறச் செய்திருந்தார்கள்.

17/8/2024 ம் தேதி புதுக்கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் மாவட்டம் சார்ந்த அமைச்சர் ரகுபதி ஆகியோரும் கலந்து கொண்டு நிகழ்ச்சிக்கு பெருமை சேர்த்தார்கள், தஞ்சை நகரில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ., தஞ்சை மாநகர் மேயர், துணை மேயர், நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டு நிகழ்ச்சியைப் பெருமைப்படுத்தினார்கள்.

இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும் நாங்கள் நடுவர்களாக கலந்து கொண்டு காலமாற்றங்களைக் கடந்து திராவிட இயக்கச் சித்தாந்தங்களை முன்னெடுத்துச் செல்லும் ஆற்றலும், திறமையும், இன உணர்வும், மொழி உணர்வும் இருபால் இளைஞர்களுக்கு உருவாகி உறுதிப்பட்டிருக்கிறது என்பதை நேரில் கண்டறிந்து பெருமையும் மகிழ்ச்சியும் கொள்ளத்தக்க வகையில் எங்களுக்கு வாய்ப்பளித்தமைக்கு மாநில இளைஞர் அணிச் செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் 200க்கும் மேற்பட்ட இருபால் இளைஞர்கள், பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினார்கள். இந்த இரண்டு மாவட்டங்களிலும் இளம் மாணவர்களைவிட மாணவிகளே அதிகம்பேர் பங்கு பெற்று உரையாற்றினார்கள். அவர்கள் ஆற்றிய உரையில் தாய்மொழி என்பது எங்கள் விழிகள். எனவே எங்கள் விழியாம் மொழியின் மீது ஆதிக்கம் செலுத்த எந்தவொரு மொழியையும் அனுமதிக்க மாட்டோம் என்று சூளுரைத்துப் பேசிய விதம் அனைவரையும் கவர்ந்தது.

"என்றும் பெரியார் ஏன்?" என்ற தலைப்பில் தஞ்சையில் பேசிய, மாணவ மாணவியர்கள் தந்தை பெரியாரின் பெண் விடுதலை, சமுதாய மறுமலர்ச்சி, பகுத்தறிவு சிந்தனைகள், ஜாதி ஒழிப்பு ஆகிய சித்தாந்தங்கள் குறித்து விரிவாகப் பேசி என்றும் பெரியாரின் கொள்கைகள்போற்றப்படவேண்டும்என்றுவிவாதித்தார்கள். அவர்கள் எடுத்து வைத்த வாதங்கள் கேட்போர் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

இதுபோல் "அண்ணா கண்ட மாநில சுயாட்சி", "கலைஞரின் தொலைநோக்கு பார்வை", "மானமிகு சுயமரியாதைக்காரர் கலைஞர்", "நவீன தமிழ்நாட்டின் சிற்பி", "சமூக நீதி காவலர் கலைஞர்" என்ற

தலைப்புகளில் மாணவர்களும் மாணவிகளும் சரியான கொள்கைப் புரிதலோடு, மக்களைக் கவரும் மொழி நடையில் பாராட்டத் தகுந்த உடல் மொழியுடன் ஆற்றிய கருத்துவளமிக்க உரைகள் அனைவரையும் கவர்ந்தது என்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அவர்கள் தங்கள் உரையில் மொழி நடைக்கும், கருத்துச் செறிவிற்கும், மக்களைக் கவரும் வகையில் அதனை வெளிப்படுத்தும் உடல்மொழிக்கும் உரிய இடமளித்து கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள் என்பது தனிச்சிறப்பாகும்!

"இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம்", "பேசி வென்ற இயக்கம்", "தமிழ்நாட்டு குடும்பங்களில் திமுக" இந்தத் தலைப்புகளில் பேசிய இருபால் மாணவர்களும் தலைப்புகளுக்கான காரணங்களையும்,பொருத்தமான எடுத்துக்காட்டுகளையும் சிறப்பாக வெளிப்படுத்தி, அவையோரின் ஒருமித்த பாராட்டுகளை பரிசாக பெற்றனர்.

"திராவிட மாடல் நாயகன் - முதல்வர் மு.க. ஸ்டாலின்" என்ற தலைப்பில் பேசிய மாணவ, மாணவியர்கள் காரண காரிய விளக்கங்களோடு, திராவிட மாடல் ஆட்சியின் தொடர் வெற்றியை முன்மொழிந்தனர். குறிப்பாக, திராவிட மாடல் நாயகன் - முதல்வர் மு.க. ஸ்டாலின் என்ற தலைப்பில் வாதிட்ட மாணவி, இன்றைய ஆட்சியின் திட்டங்களை ஒன்று விடாமல் வரிசைப்படுத்தி நல்ல மொழிநடையில் வெளிப்படுத்தியதோடு, அந்தத் திட்டங்களால் மக்கள் பெற்ற பயனையும், அந்தத் திட்டம் உருவாக்கிய தாக்கத்தையும் மிக அற்புதமாக விளக்கிப் பேசி முதல் பரிசையும் தட்டிச் சென்றார் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

இதுபோல் அனைவரும் சிறப்பாக பேசிய நிலையில் எப்படி பரிசுக்காக வரிசைப்படுத்துவது என்ற தயக்கமே நடுவர்களாகிய எங்களிடம் உருவானது. தம்பி. இளையராஜாவிடம் நிலைமையை எடுத்துச் சொல்லி மாநில இளைஞர் அணிச் செயலாளர் அனுமதி பெற்று அனைவருக்கும் பரிசுகள் வழங்கலாமா என்று ஆலோசித்த காலகட்டமும் உண்டு. இருப்பினும், அது முறையாக இருக்காது என்று கருதியதால் தங்கத்தை புடம் போடுவது போல, வைரத்திற்கு பட்டைத் தீட்டுவது போல, புடம் போட்ட தங்கமாக, பட்டைத் தீட்டப்பட்ட வைரமாக சிலர் மட்டும் பரிசு பெறுகிறார்கள். புடம் போடாத தங்கக் கட்டிகளும், பட்டைத் தீட்டப்படாத வைரங்களும் எதிர்காலத்தில் புடம் போட்டத் தங்கங்களாகவும், பட்டைத் தீட்டப்பட்ட வைரங்களாகவும் நிச்சயம் திகழ்வார்கள் என்பதில் ஐயமில்லை!!

தலைமுறை இடைவெளி ஏற்பட்டுவிடாமல் முந்தைய தலைமுறைக்கும், இன்றைய தலைமுறைக்கும் பாலம் அமைத்து திராவிட சிந்தனைகளையும், கருத்துகளையும் இன்றைய தலைமுறைக்கு கொண்டு சேர்க்கும் ஓர் அருமையான ஏற்பாட்டை இந்த நிகழ்ச்சிகளின் மூலம் காலஇடைவெளியை இணைத்து, திராவிட முன்னேற்ற கழகம் என்பது ஓர் கட்சி மட்டுமல்ல, அது ஓர் காலம் கடந்து சுழன்று கொண்டிருக்கும் இயக்கம் என்று தன் திட்டங்களாலும், செயல்களாலும் நிரூபித்துக் காட்டிய இளைஞரணி செயலாளரை, இளைஞர் அணி தொடங்கிய மதுரை மாநகரத்தில் அன்றைய மாவட்டக் கழகச் செயலாளர் என்ற நிலையில் வாழ்த்துகிறேன். உங்கள் பயணம் தொடரட்டும். நாங்கள் என்றும் எந்தச் சூழ்நிலையிலும் துணை நிற்போம். ஆம்!! இது வாழ்த்துரை மட்டுமல்ல - இதயத்தின் அடித்தளத்தில் என்றும் வற்றாது தேங்கியிருக்கும் உணர்வுகளின் வெளிப்பாடாகும்!

பொன். முத்துராமலிங்கம்
முன்னாள் அமைச்சர்,
உயர்மட்ட
செயல்திட்டக்குழு
உறுப்பினர்

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தேனி மாவட்டம் வீரபாண்டி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் கால்நடை பண்ணை வளாகம் மற்றும் தீவன உற்பத்தி மையக் கட்டடங்களை காணொளிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார் . அதனைத் தொடர்ந்து தேனி மாவட்ட ஆட்சியர் மற்றும் தங்க தமிழ்ச்செல்வன் எம்.பி., மகாராஜன் எம்.எல்.ஏ., சரவணகுமார் எம்.எல்.ஏ. ஆகியோர் கலந்து கொண்டு கட்டடங்களைப் பார்வையிட்டனர். உடன் தேனி வடக்கு ஒன்றிய செயலாளர் தேனி ஒன்றிய குழு தலைவர் சக்கரவர்த்தி, வீரபாண்டி பேரூராட்சி தலைவர் கீதாசசி மற்றும் கழக முன்னோடிகள், அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. அயலக அணி

அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) - எத்தியோப்பியா, ருவாண்டா ஆகிய அயல்நாடுகளின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. அறிவிப்பு

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA), எத்தியோப்பியா, ருவாண்டா ஆகிய அயல்நாடுகளின் தி.மு.க. அயலக அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

அமெரிக்க ஐக்கிய நாடுகள் (கிழக்கு) (U.S.A. East)

அமைப்பாளர் **'நியூ ஜெர்சி' பாலா** நியூஜெர்சி, யூ.எஸ்.ஏ.

துணை அமைப்பாளர்கள் 1.இளமாறன், 2.தீபா, 3.ரவி பெருமாள், 4. கோசல், 5.ரியாஸ், 6.தர்மராஜ், 7. கோபி கதிர்வேல்,

அமெரிக்க ஐக்கிய நாடுகள் (மேற்கு) (U.S.A. West)

அமைப்பாளர் **சக்திவேல் ராமசாமி,**

துணை அமைப்பாளர்கள் 1.ஆதித்யா, 2.ரோகிணி, 3.செல்வா, 4.சுப்பு, 5.பிரேம், 6.ஜான் பிரிட்டோ, 7. நைனார் முஹம்மது, 8.கார்த்திக் பிரபாநந்தன்,

அமெரிக்க ஐக்கிய நாடுகள் (மத்திய) (U.S.A. Central)

அமைப்பாளர் **'வாஷிங்டன்' சிவா,** வாஷிங்டன்,

துணை அமைப்பாளர்கள் 1.ம.வீ.கனிமொழி, 2. பிரபு சிவகுருநாதன், 3. உதய் பொய்யாமொழி, 4.பூவண்ணன், 5.ஆண்டனி, 6. பிரபு சிவகுருநாதன் 7.பெப்பின், 8.கார்த்தி சந்திரசேகரன்

அமெரிக்க ஐக்கிய நாடுகள் (வடக்கு) (U.S.A. North)

அமைப்பாளர் **'விஸ்கான்சின்' சிவகுமார்,** விஸ்கான்சின்,

துணை அமைப்பாளர்கள் 1.கோபிநாத், 2.ஜெயகாந்த், 3.ராஜ் சந்தானம், 4.ராஜன், 5.கல்பனா சுரேன், 6.விஜய் சாந்தலிங்கம், 7. பிரிட்டோ ஜான்,

அமெரிக்க ஐக்கிய நாடுகள் (தெற்கு) (U.S.A. South)

அமைப்பாளர் **பாண்டிமதி,**

துணை அமைப்பாளர்கள் 1.அரவிந்த், 2.பொய்யாமொழி, 3.முத்துச்செல்வி, 4.ஆனந்த், 5.ராம்குமார், 6.சரவணகுமார், 7.பிரபு,

எத்தியோப்பியா (Ethiopia)

அமைப்பாளர் **டாக்டர் கிருஷ்ணராஜ் ராமசாமி,** எத்தியோப்பியா.

துணை அமைப்பாளர்கள் 1.டாக்டர் ஜான்சன் சந்தோஷ், 2.டாக்டர் சுப்பிரமணி, 3. டாக்டர் மகேந்திரன், 4.டாக்டர் தில்லை அரசு, 5. டாக்டர் இளங்கோ, 6. எம்.அருண்தீப், 7.ஜி. தண்டபாணி.

ருவாண்டா (Rwanda)

அமைப்பாளர் **எம்.பி. ரியாஸ்,** ருவாண்டா.

துணை அமைப்பாளர்கள் 1. ஆ.கருணாகரன், 2எம்.ஏ. பைசல்அன்வர், 3.மா.ராமதாஸ்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.
நாள்: 20.08.2024

எம்.எம்.அப்துல்லா எம்.பி.,
செயலாளர்
தி.மு.க. அயலக அணி